இலங்கை திறந்த பல்கலைக்கழகம்
முகாமைத்துவ கற்கைகள் பீடம்
தொழில்முனைவு மற்றும் சிறு வணிக முகாமைத்துவதில் மேம்பட்ட சான்றிதழ் (ESBM)
AFC2308- பொருளாதார அறிமுகம்
இறுதித் தேர்வு - 2025/2026
கால அளவு - இரண்டு (02) மணித்தியாலங்கள்

8118

திகதி: 09.05.2026 நேரம்: பிப 01.30- 3.30

அறிவுறுத்தல்கள்:

- இவ்வினாத்தாள் ஆறு (06) வினாக்களைக் கொண்டுள்ளது. ஏதேனும் நான்கு (04) வினாக்களுக்கு விடையளிக்குக.
- விடைத்தாளில் கொடுக்கப்பட்டுள்ள இடத்தில் உங்கள் சுட்டெண்ணை எழுதவும்.
- இவ்வினாத்தாள் இரண்டு (02) தட்டச்சு செய்யப்பட்ட பக்கங்களைக் கொண்டுள்ளது.
- அனைத்து வேலைப்பாடுகளும் விடைத்தாளில் தெளிவாகக் குறிப்பிடப்பட வேண்டும்.
- அனைத்து வினாக்களுக்கும் சமனான புள்ளிகள் (ஒவ்வொன்றிற்கும் 25 புள்ளிகள்).
- நிரல்படுத்தப்படாத கணிப்பான்களின் பயன்பாடு அனுமதிக்கப்படுகிறது.

**வினா 01**

அ) சிற்றின பொருளாதாரத்திற்கு (Micro Economics) பேரின பொருளாதாரத்திற்கு (Macro Economics) இடையிலான வேறுபாட்டினை வேறுபடுத்துக. (03 புள்ளிகள்)

ஆ) "ஒவ்வொரு பொருளாதாரமும் பற்றாக்குறைச் (scarcity) சூழலில் இயங்குகிறது. அங்கு, வரம்பற்ற மனிதத் தேவைகளைப் (Unlimited human wants) பூர்த்தி செய்ய, வரையறுக்கப்பட்ட வளங்கள் (limited resources) திறமையாகப் பயன்படுத்தப்பட வேண்டும்." எந்தவொரு பொருளாதாரமும் எதிர்கொள்ளும் அடிப்படை பொருளாதாரப் பிரச்சினைகள் யாவை? அவை ஒவ்வொன்றையும் சுருக்கமாக விளக்குக. (10 புள்ளிகள்)

இ) உற்பத்தி சாத்திய வளையி (PPC) வரைபடத்தைப் பயன்படுத்தி, பின்வரும் சார்பற்ற சூழ்நிலைகளை (independent scenarios) விளக்குக.

1. பொருளாதார வளர்ச்சி (Economic growth)
2. பொருளாதாரத்தின் ஒரு துறையில் தொழில்நுட்ப வளர்ச்சி (Technological development in one sector of the economy).
3. வளங்களின் முழுமையான பயன்பாடு (Full utilization of resources). (12 புள்ளிகள்)

**(25 புள்ளிகள்)**

**வினா 02**

அ) பொதுப் பண்டத்திற்கும் (Public Goods) தனியார் பண்டத்திற்கும் (Private Goods) இடையிலான வேறுபாட்டினை வேறுபடுத்துக.. (05 புள்ளிகள்)

ஆ) வாய்ப்புச் செலவு (Opportunity cost) என்றால் என்ன? தொழில்முனைவோரின் (entrepreneurs') முடிவெடுக்கும் திறனில் வாய்ப்புச் செலவு எவ்வாறு தாக்கத்தை ஏற்படுத்துகிறது என்பதைச் சுருக்கமாக விளக்குக. (10 புள்ளிகள்)

இ) நிரம்பலின் தொகை மாற்றத்திற்கும் (Change in quantity supplied) நிரம்பலில் ஏற்படும் மாற்றத்திற்கும் (change in supply) உள்ள வேறுபாட்டை விளக்கப்படங்களைப் பயன்படுத்தி விளக்க (10 புள்ளிகள்)

**(25 புள்ளிகள்)**

**வினா 03**

அ) ஒரு பொருளின் கேள்வியை பாதிக்கும் ஐந்து காரணிகளின் பெயர்களை பட்டியலிடுக. (05 புள்ளிகள்)

ஆ) மிகை கேள்வி (Excess demand) மற்றும் மிகை நிரம்பல் (Excess supply) ஆகியவற்றை விளக்கப்படத்தின் மூலம் விளக்குக. (10 புள்ளிகள்) 0118

இ) பின்வரும் சமன்பாடுகள் சந்தை சமநிலையிலிருந்து பெறப்பட்டுள்ளன.

$Qd = 300-3P$

$Qs = 2P+80$

1. சமநிலை விலை (equilibrium price) மற்றும் அளவைக் (quantity) கணக்கிடுக.
2. நிரம்பல் சமன்பாடு (Supply Equation) **Qs = 2P+100** என மாறுகிறது எனக் கருதி, புதிய சந்தைச் சமநிலை அளவு மற்றும் விலையைக் ( new market equilibrium quantity and price) கணக்கிடுக. (10 புள்ளிகள்)

**(25 புள்ளிகள்)**

**வினா 04**

அ) குறைந்து செல்லும் எல்லை விளைவு விதி (Law of diminishing marginal utility) என்றால் என்ன? (05 புள்ளிகள்)

ஆ) தொழிலாளர் செறிவு (Labour intensive) மற்றும் மூலதனச் செறிவு (Capital Intensive) உற்பத்தி நுட்பங்களை வேறுபடுத்திக் காட்டுக. (05 புள்ளிகள்)

இ) குறுகிய காலத்தில், ஒரு நிறுவனம் ஒரு பொருளின் 3,000 அலகுகளை உற்பத்தி செய்கின்றது என கொள்க. ஓர் அலகின் கிரயம் ரூ. 40 ஆகும், இதில் 25% மாறும் கிரயம் மற்றும் எஞ்சியவை நிலையான கிரயம் ஆகும். இத் தகவலின் அடிப்படையில்,

I. அலகிற்கான மாறும் கிரயத்தினைக் (Variable cost per unit) கணிப்பீடுக
II. அலகிற்கான நிலையான கிரயத்தினைக் (Fixed cost per unit) கணிப்பீடுக
III. உற்பத்தியின் மொத்த மாறும் கிரயத்தினைக் (Total variable cost of production) கணிப்பீடுக
IV. உற்பத்தியின் மொத்த நிலையான கிரயத்தினைக் (Total fixed cost of production) கணிப்பீடுக
V. உற்பத்தியின் மொத்தக் கிரயத்தினைக் கணிப்பீடுக (15 புள்ளிகள்)

**(25 புள்ளிகள்)**

**வினா 05**

அ) உற்பத்திக் காரணிகளையும் (Factors of production) அவற்றுடன் தொடர்புடைய வருவாய்களையும் (corresponding return) குறிப்பிடுக. (05 புள்ளிகள்)

ஆ) ஒரு பொருளாதாரத்தின் ஐந்து பேரின பொருளாதார மாறிகளின் (Macro economic variables) பெயரினைக் குறிப்பிட்டு விளக்குக (10 புள்ளிகள்)

இ) இருதுறைப் பொருளாதாரத்தில் வருமானத்தின் வட்ட ஓட்டத்தை (Two-Sector Model of Circular Flow of Income) விளக்குக. (10 புள்ளிகள்)

**(25 புள்ளிகள்)**

**வினா 06**

அ) நிதி இடைத்தரகு (Financial Intermediation) என்பதை வரையறுக்குக. (05 புள்ளிகள்)

ஆ) வணிகச் செயல்திறன் (Business performance) மீது தொழில்நுட்பச் சூழலின் தாக்கத்தை விளக்குக. (05 புள்ளிகள்)

இ) ஒரு பொருளாதாரத்தின் தேசிய வெளியீடு (National output of the Economy) என்பதன் பொருள் என்ன? அதனை அளவிடுவதற்கான மூன்று முக்கிய அணுகுமுறைகளினை விளக்குக. (15 புள்ளிகள்)

**(25 புள்ளிகள்)**

**மொத்தம் = 100 புள்ளிகள்.**

-பதிப்புரிமையுடையது-